கால்நடை பராமரிப்பு,
பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

# கால்நடை பராமரிப்பு

## மானியக் கோரிக்கை எண் : 6

## அறிவிப்புகள்
## 2016–2017


**பா. பாலகிருஷ்ணா ரெட்டி**

கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்

## 1. திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் தீவன ஆய்வுக் கூடம் அமைத்தல்

தமிழகத்தில் கலப்பினக் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதன் காரணமாக கால்நடை தீவனத்திற்கான தேவை அதிகரித்துள்ளது. தீவனத்திற்கான செலவு அதிகரிக்கும் காரணத்தால் வழக்கத்தில் இல்லாத தீவனப் பொருட்களைக் கொண்டு கால்நடை தீவனங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்தீவனப் பொருட்கள் கால்நடைகளுக்கு உகந்ததாக உள்ளதை உறுதி செய்வது இன்றியமையாததாகிறது. இதன்பொருட்டு, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின்** ஆணையின்படி நடப்பு நிதியாண்டில் 2 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் தீவன ஆய்வுக் கூடம் அமைக்கப்படும்.

## 2. காஞ்சிபுரம் மாவட்டத்தில் மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடம் கட்டுதல்

பல முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி வரும் இத்துறையின் சில இடங்களில் உள்ள கண்காணிப்பு அலுவலகங்கள், வாடகைக் கட்டடங்களிலும், போதிய இடவசதி இல்லாத கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. கண்காணிப்பு அலுவலகங்களுக்கு போதிய வசதியுடன் கூடிய நவீன கட்டடங்கள் வழங்கும் பொருட்டு, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின்** ஆணையின்படி நடப்பு நிதியாண்டில் ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் காஞ்சிபுரம் மாவட்ட மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

## 3. தமிழகத்தில் புதிதாக 2 கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் தோற்றுவித்தல்

கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களினால் விவசாயிகளுக்கு உண்டாகும் இழப்பினைத் தவிர்க்கவும், நவீன நோய் கண்டறியும் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி கால்நடைகளின் நலனை தொடர்ந்து பாதுகாக்கவும், அண்டை மாநிலங்களில் அவ்வப்போது ஏற்படும் பறவைக் காய்ச்சல் போன்ற நோய்களின் தாக்கம் தமிழகத்தில் ஏற்படா வண்ணம் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தவும், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின்** ஆணையின்படி 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில், 2 புதிய கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் திருவள்ளூர் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் தோற்றுவிக்கப்படும்.

## 4. சென்னையில் கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு (Veterinary Epidemiology Centre) அமைத்தல்

கால்நடை நோய்கள் குறித்த முன்னறிவிப்பு செய்யும் வகையில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின்** ஆணையின்படி இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் ஒத்துழைப்புடன் சென்னையில் ஒரு புதிய கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு 8 இலட்சம், 50 ஆயிரம் ரூபாய் செலவில் நடப்பு நிதியாண்டில் ஏற்படுத்தப்படும்.

## 5. துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 11 புதிய வாகனங்கள் கொள்முதல் செய்தல்

கால்நடை பராமரிப்புத் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் தொலைநோக்குத் திட்டங்களைக் கண்காணிக்கும் வகையில், இத்துறையின் கள அலுவலர்களுக்கு 11 புதிய வாகனங்கள் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின்** ஆணையின்படி நடப்பு நிதியாண்டில் 67 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.